ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2227/11 - 2021 මැයි මස 12 වැනි බදාදා - 2021.05.12

*2227/11 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அறிவித்தல்

*அரசியலமைப்பின் "154இ" பிரிவுடன் சேர்த்து வாசிக்கக்கூடிய, மேல் மாகாணத்தில் 1989 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க மாகாண வீதி அபிவிருத்தி அதிகார நியதிச் சட்டங்கள், 15 ஆம் பந்தியின் ஊடாக எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய, மேல் மாகாணத்தின் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்தல் தொடர்பான "நிர்வாக செயற்பாட்டு விதிக்கோவையின் 1 ஆம் பிரிவில், 16.6 பந்தியில்" திருத்தம் செய்வது தொடர்பாக, மேல் மாகாணத்தின் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் சபையினால் 2020.12.24 ஆந் திகதி அனுமதியளிக்கப்பட்ட, நிர்வாக செயற்பாட்டு விதிக்கோவையை திருத்தம் செய்தல் தொடர்பான சட்டதிட்டங்களுக்காக இத்தால் அனுமதி வழங்கப்படுவதாகவும், அத்தகைய அனுமதி வழங்கப்படும் திகதியாகிய இன்று தொடக்கம், மேல் மாகாணத்தின் வீதி அபிவிருத்தி அதிகார சபை பொருட்டு இந்த திருத்தப்பட்ட விதிகள் செல்லுபடியாகும் எனவும் தீர்மானமளிக்கின்றேன்.*

**வெல்லாரச்சிகே தொன் ரொஷான் மஹேஷ் ஜேம்ஸ் குணதிலக்க,**
ஆர்டபிள்யூபீ அன்ட் பார்,
பீஎஸ்வீ, யூஎஸ்பீ, பீஎச்டீ, எப்ஜஎம் (ஸ்ரீலங்கா), என்டீசீ, பீஎஸ்சீ,
மாஷல் ஒப் த ஸ்ரீலங்கா எயார்போர்ஸ்,
ஆளுநர்,
மேல் மாகாணம்.

மேல் மாகாண சபை கட்டிடம்,
மேல் மாகாண சபை ஆளுநர் அலுவலகம்,
*2021, மே 07.*

**விதிகள்**

*01.* இந்த விதி, மேல் மாகாணத்தின் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிர்வாக செயற்பாட்டு விதித்திட்டங்களை திருத்தம் செய்வதற்காக ஆக்கப்பட்டுள்ளது.

*02.* இந்த விதி, மேல் மாகாணத்தின் வீதி அபிவிருத்தி அதிகார சபையின், நிர்வாக செயற்பாட்டு விதித்திட்டங்களை திருத்தம் செய்யும் விதிகளாகக் கருதப்படும்.

*03.* மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் செயற்பாடுகளை நிர்ணயிப்பதற்காக மேல் மாகாணத்தின் நெடுஞ்சாலை துறை அமைச்சரினால் ஏற்பாடாக்கப்பட்ட, 2004.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறையிலுள்ள “மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிர்வாக செயற்பாடு விதிக்கோவை” விதித்திட்டங்களின் கீழ் 16 ஆம் அத்தியாயத்தில் 16.6 ஆம் உப பிரிவினை அகற்றி, அதற்குப் பதிலாக கீழ்க்காணும் பந்தியை உட்படுத்துமாறு இத்தால் திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

வாழ்வாதார கொடுப்பனவு அளவு பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது :

| மூலக்கொடுப்பனவு (மாதாந்தம்) | வாழ்வாதார கொடுப்பனவு (24 மணி நேரத்திற்காக) |
|---|---|
| 01. ரூ. 32,779.00 வரை | ரூ. 700.00 |
| 02. ரூ. 32,780.00 தொடக்கம் 43,479.00 வரை | ரூ. 800.00 |
| 03. ரூ. 43,480.00 இற்கு கீழ் | ரூ. 1,000.00 |

05-428

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.